திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் நீண்டநாள் கோரிக்கையாக இருந்தது. ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 8 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. அந்தப் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தக் கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கு உட்பட்ட கண்மாய்களை இப்பொழுதே தூர்வாரி வைத்தால், அது அப்பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விக்கிரமங்கலம் கண்மாய் மற்றும் ஐயனார்குளம் கண்மாய் போன்றவை தூர்வாரப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எனவே, அந்தப் பணிகளையும் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அந்தக் கண்மாய்களைத் தூர்வாருவதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கால்நடை கிளை மருத்துவமனை

***33882—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 25]

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடைக் கிளை மருத்துவமனை தேவை என்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைப் பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு அந்தக் கிராமம் வருகிறது. வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு கால்நடை பராமரிப்புத் துறைக்கு நிதியினை வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையைப்பெற்று, அந்தக் கிராமத்திற்கு ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே வழிகாட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து அப்பகுதி மக்கள் நலன் மட்டுமின்றி, 'அம்மா, அம்மா' என்று அழைக்கும் கால்நடைகளின் நலன் காத்த எங்களுடைய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, அப்பகுதி விவசாய மக்கள் தாங்கள் அறிவித்த இந்தச் செய்தியைக் கேட்டவுடன் எல்லையில்லா மகிழ்ச்சி அடைவார்கள் தாயே!

ஏழை விவசாய மக்களுக்கு விலையில்லா ஆடுகள், பசு மாடுகள் தந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் தாயாக இருப்பதுபோல், கால்நடை ஜீவன்களுக்கும் தாயாக ஆட்சி செய்யும் எங்கள் அன்னையே, தங்கள் பாதம் பணிந்து நன்றி கூறுகின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் துவக்கப்படுமா என்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100 கிளை நிலையங்களை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில்தான் 100 கிளை நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே ஆணையைப் பெற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே, வரும் நிதியாண்டிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

சர்க்கரை ஆலை

***35682—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—